


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 240 22.2.2026 SUNDAY MAASI : 10 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 240 22.2.2026 ஞாயிற்றுக்கிழமை மாசி : 10 விலை : ரூ.5/–

## ரூ.213 கோடி மதிப்பில்

# “மதுரையில் புதிய மேம்பாலம்”

## முதல்வர் திறந்து வைத்தார்



மதுரை: பிப்.22-

மதுரை கோரிப்பாளையம் முதல் நெல்பேட்டை வரை ரூ.213 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மதுரையில் நடைபெறும் அரசு விழாக்கள் மற்றும் கட்சி நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை நேற்று காலை வந்தடைந்தார். பின்னர், அவர் மதுரை வடபழஞ்சி எல்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டிடத்தை திறந்து வைத்தார்.

அதையடுத்து, தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரையில் ரூ.213.80 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மேம்பாலத்தை திறந்து வைத்தார். வைகை ஆற்றில் ஆல்பர்ட் விக்டர் பாலத்துக்கு இணையாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், 1305 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ளது. சேவைச் சாலை பாலத்தின் இடதுபுறத்தில் 7.50 மீட்டர் அகலத்திற்கு இரண்டு வழித்தடமாகவும், வலது பகுதியில் 10.5 மீட்டர் அகலத்துக்கு மூன்று வழிதடமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மேம்பாலம், செல்லூர், தல்லாகுளம், தமுக்கம், நெல்பேட்டை, அண்ணாநகர், மதுரை மத்திய பகுதிகளுக்கிடையேயான போக்குவரத்தை எளிதாக்கி, பொதுமக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன், சாலை பாதுகாப்பையும் மேம்படுத்தும். மேலும், அவசர சேவை வாகனங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து வாகனங்கள் விரைவாகச் செல்ல வழிவகுப்பதன் மூலம் நகரின் மொத்த போக்குவரத்து திறன் மற்றும் நகர்ப்புற இணைப்பை மேம்படுத்தும்.

தொடர்ந்து அவர், திருமங்கலம் கள்ளிக்குடி ரயில் நிலையங்களுக்கு இடையே ரூ.38.81 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சாலை மேம்பாலம், சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில் ரூ.1.7 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரர்கள் மருதுபாண்டியர்கள் சிலை ஆகியவற்றை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். பின்னர், அவர் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஹெச்பி கணினி திறன் மேம்பாட்டு மையத்தை தொடங்கி வைத்தார்.



■ திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் பாலகிருஷ்ணாபுரம் ஊராட்சியில் பணிபுரியும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட பணியாளர்களை வட்டார வள அலுவலர் அசோக் அவர்கள் ஆய்வு செய்து முதலுதவி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் கோவிந்தராஜ்



## வாடிப்பட்டி பேரூராட்சிக்கு புதிய அலுவலகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி வாயிலாகத் திறப்பு

மதுரை, பிப்.22-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தேர்நிலை பேரூராட்சியில், மூலதன மானியத் திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் பேரூராட்சிக்கு என புதிய வசதிகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இந்த கட்டிடத்தினை மதுரையில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பேரூராட்சி தலைவர் மு.பால்பாண்டி கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி வைத்தார். முன்னதாக தமிழக முதல்வரின் நிகழ்ச்சிகளை எல்இடி திரையில் கண்டு மகிழ்ந்தனர்.

இதில் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயலட்சுமி, துணை தலைவர் வக்கீல் கார்த்திக், முன்னாள் பேரூராட்சி தலைவர் கிருஷ்ணவேணி, வார்டு கவுன்சிலர்கள், அலுவலகப் பணியாளர்கள், துப்புரவு தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## சமுதாயத்திற்கு நற்பணி செய்ய மாணவர்கள் முன்வர வேண்டும்“ சேரன் குளோபல் பள்ளி ஆண்டு விழாவில் தாளாளர் பேச்சு

திண்டுக்கல், பிப்.22-

திண்டுக்கல் மாவட்டம், சித்தையங்கோட்டை சேடபட்டி சேரன் குளோபல் மெட்ரிக் பள்ளியின் 12 வது ஆண்டுவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு தலைமை நிர்வாகி கே.ஏ.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் மீனாட்சிசுந்தரம், சிவக்குமார். செல்வகுமார். சோபா, எஸ்.ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் ஏ.மகாலெட்சுமி வரவேற்று பேசினார். துணை முதல்வர் என்.சரண்யா ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் பள்ளி தாளாளர் என்.திலகம் மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் பேசும்போது இந்த சமுதாயம் நமக்கு நல்லதொரு வாழ்வினை கொடுத்துள்ளது. நாம் நம்மை வளர்த்த சமுதாயத்திற்கு நம்மால் முடிந்த நற்பணிகளை செய்யவேண்டும் என்றார். சேரன் குளோபல் பள்ளியை பொறுத்தவரை மாணவர்களுக்கு கல்வியுடன் நற்பண்புகளையும் கற்றுத்தருவதால் எங்கள் பள்ளி மாணவர்களுக்கு எந்த இடத்திற்கு சென்றாலும் தனித்தன்மையுடன் இருப்பார்கள் என்றார்.

தலைமை நிர்வாகி இராதாகிருஷ்ணன் பேசும்போது இப்பகுதியில் சேரன் குளோபல் பள்ளியை ஆரம்பித்து படிப்படியாக உயர்த்தி மெட்ரிக் பள்ளியாக தரம் உயர்த்தினோம். இப்போது பள்ளி மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு நற்செய்தியை சொல்கிறோம். விரைவில் சேரன் குளோபல் பள்ளி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியாக தரம் உயரும் என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய தன்னம்பிக்கை பேச்சாளர் ஐ.ஜெகன் இருதயகுமார் பேசும்போது, இப்பகுதியில் சிறந்த பள்ளியாக சேரன் குளோபல் பள்ளி பெற்றோர்கள் மத்தியில் இடம்பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இப்பள்ளி தொடர்ந்து மென்மேலும் பல சாதனைகளை படைக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் பள்ளி மேலாளர் ஓ.பி.பாரதிராஜா, உடற்கல்வி ஆசிரியர்கள் அசோக்குமார், நாகராஜ், திவாகர், பள்ளி அலுவலக பணியாளர்கள் ஜோலின், ரூபி, வினிதா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் 20 பா.ம.கவினர் தி.மு.கவில் இணைவு



திண்டுக்கல், பிப்.22-

ஆத்தூர் ஒன்றியம், வீரக்கல் ஊராட்சி, வடக்கு மேட்டுப்பட்டியைச் சேர்ந்த பா.ம.க.வினர் 20 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். வூசு விளையாட்டுப்போட்டிகளில் தேசிய அளவில் சாதனை படைத்து தமிழக அரசு சார்பாக அரசு பணி நியமனங்களை பெற்ற வீராங்கனை சுவஸ்ரீ அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.


திண்டுக்கல், திருநகரைச் சேர்ந்த மாணவி சுவஸ்ரீ வூசு பயிற்சியாளர் ஜாக்கி சங்கர் அவர்களிடம் பயிற்சி பெற்று தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார். கேலோ இந்தியா போட்டிகளில் தங்கப் பதக்கம் மற்றும் பெடரேசன் இந்தியா, மற்றும் பல்கலைக்கழக போட்டிகளில் பங்கேற்று தங்கப் பதக்கமும் பெற்றுள்ளார். இதுபோல பல பதக்கங்களை பெற்று சாதனை படைத்ததை பாராட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவி சுவஸ்ரீயின் சாதனையை பாராட்டி அரசுப் பணிக்கான நியமன ஆணையினை வழங்கினார்கள். திண்டுக்கல் மாவட்ட கருவூலத்தில் பணி நியமன ஆணை பெற்ற சுவஸ்ரீ ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் நியமன ஆணையை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

அதன்பின்னர் வீரக்கல் ஊராட்சி வடக்கு மேட்டுப்பட்டியைச் சேர்ந்த பா.ம.கவினர் 20 பேர் அக்கட்சியிலிருந்து விலகி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், ஜாதி, மத, இன, கட்சி வேறுபாடின்றி எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையில் செயல்படுவதால், ஆத்தூர் தொகுதியில் மாற்று கட்சியினர் திமுகவில் இணையும் நிலை உருவாகியுள்ளது என்றார். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், இன்பராஜ், முருகேசன், மணி, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் நந்தகோபால், ரேகா அய்யப்பன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன். பஞ்சம்பட்டி மணி, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, சுமதி கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரமேஷ், காங்கேயன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் செல்வம், அரவிந்தன் மற்றும் கரிசல்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர், பால்ராஜ், கரிசல்பட்டி ஆசான் அமலஇளவரசு திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## கர்நாடகாவில் சிவாஜி ஜெயந்தி பேரணியில் கல்வீச்சு: பாகல்கோட்டையில் 144 தடை உத்தரவு



பெங்களூரு, பிப்.22-

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டையில் சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணியில் இரு தரப்பினரிடையே கல்வீச்சு நடைபெற்றது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டத்தில் உள்ள நியூ டவுனில் நேற்று முன் தினம் இரவு சத்ரபதி சிவாஜி ஜெயந்தி பேரணி நடைபெற்றது. கிலா காளி பகுதியில் உள்ள மசூதி அருகே பேரணி சென்றபோது மர்ம நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் கூட்டத்தில் வந்த இளைஞர்களும் கற்களை வீசியதால் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இது குறித்து தகவலறிந்த பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்தனர். இரு தரப்பினர் மீதும் லேசான தடியடி நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நியூ டவுன் பகுதியில் உள்ள இறைச்சி கடைகள் மீது சிலர் கல் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டதால் 500க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அங்கு சனிக்கிழமை இரவு 12 மணி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாகல் கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சித்தார்த் கோயல் கூறுகையில், “பாகல்கோட்டையில் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அசம்பாவித சம்பவத்துக்கு காரணமானவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள். சிசிடிவி காட்சிகளின்படி 8 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகிறோம். சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

முதல்வர் சித்தராமையா கூறுகையில், “பாகல்கோட்டையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கர்நாடகாவில் மத ரீதியான மோதல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது” என்றார்.

## டெல்லி செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்த சதி’ : உளவுத் துறை எச்சரிக்கை



புது டெல்லி, பிப்.22-

தலைநகர் டெல்லியில் செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்குதல் நடத்தப்படலாம் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. சாந்தினி சௌக் பகுதியில் உள்ள ஒரு கோயிலை பயங்கரவாதிகள் குறிவைக்கலாம் எனவும் உளவுத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கோட்டையை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் சாந்தினி சௌக்கின் சில பகுதிகள் உட்பட முக்கிய கோயில்கள் பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர் இ தொய்பா (LeT) கண்காணிப்பில் இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் தெரிவிக்கின்றன. சாந்தினி சௌக்கில் உள்ள ஒரு கோயிலை இலக்காகக் கொண்டு, அந்த பயங்கரவாத அமைப்பு வெடிகுண்டு தாக்குதலை திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மசூதியில் பிப்ரவரி 6ம் தேதி நடந்த குண்டுவெடிப்புக்குப் பழிவாங்க லஷ்கர் இ தொய்பா முயற்சிப்பதாகவும், இந்தியாவில் ஒரு பெரிய தாக்குதலை நடத்த திட்டமிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய கோயில்கள் லஷ்கர்இதொய்பாவின் கண்காணிப்பில் உள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் 10 அன்று டெல்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டைக்கு அருகில் நடந்த ஒரு பயங்கரமான கார் குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். செங்கோட்டை மெட்ரோ நிலையத்தின் கேட் எண் 1க்கு அருகில் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்ட ஒரு கார் வெடித்ததில் அருகிலுள்ள பல வாகனங்கள் வெடித்து சிதறின.



## புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி: மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனியில் கனமழை வாய்ப்பு

சென்னை, பிப்.22-

வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் நாளை (பிப்.22) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நாளை வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தேனி, திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப்.23 முதல் 25ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 26, 27 தேதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

மன்னார் வளைகுடா, அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பணப்பெட்டியை வாங்கிக் கொண்டு திமுகவுடன் கூட்டணி!’ தேமுதிகவை தாக்கும் நயினார் நாகேந்திரன்

திருச்சி, பிப்.22-

“பணப்பெட்டியை வாங்கிக் கொண்டு திமுக கூட்டணியில் சேர்ந்து வருகிறார்கள்” என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.



பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் திருநெல்வேலியில் இருந்து வந்தே பாரத் ரயில் மூலம் இன்று காலை திருச்சி ரயில் நிலையம் வந்தடைந்தார். ரயில் நிலையத்தில் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வரும் மார்ச் 11ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திருச்சிக்கு வருகை தர உள்ளார்.

அன்றைய தினம் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது அதற்காக இடம் தேர்வு செய்ய உள்ளோம். இடம் தேர்வு செய்து கூட்டணி கட்சிகளிடம் ஆலோசித்து எந்த இடத்தில் பொதுக்கூட்டம் வைப்பது என்பது தொடர்பான இறுதி முடிவை அறிவிப்போம். 200 இடங்களில் திமுக வெற்றி பெறுவோம் என்கிறார்கள். ஆனால் 200 இடங்களில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை மக்கள் தான் முடிவு செய்வார்கள்.

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை எவ்வளவு சதவீதம் நிறைவேற்றி உள்ளது என்பதை திமுக தலைவர்கள் மாற்றி மாற்றி கருத்து கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் 90% தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

ஏற்கெனவே பொய்யான வாக்குறுதியை கொடுத்தது போல், மீண்டும் பொய்யான வாக்குறுதிகளை திமுக அரசு கொடுக்க தொடங்கியுள்ளது. இப்போது எங்களுக்கு உள்ள கூட்டணி 2021ம் ஆண்டே இருந்திருந்தால் நாங்கள் அப்போது 110 இடங்களில் வெற்றி பெற்று இருப்போம். வரும் தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளும் சட்டம் ஒழுங்கு சரியில்லை, கஞ்சா மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. கொங்கு பகுதிகளில் வயதானவர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். யாருக்கும் எந்த பாதுகாப்பும் இல்லை. 33 லாக்கப் மரணங்கள் நடந்துள்ளது. தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறவில்லை.

பணப்பெட்டியை வாங்கிக் கொண்டுதான் திமுக கூட்டணியில் சேர்ந்து வருகிறார்கள். எங்கள் கூட்டணி வலுவாக உள்ளது, திமுக கூட்டணி வலுவிழந்து உள்ளது. இந்த நிலையில்தான் மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். அதிமுக தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் தான் மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என மக்கள் நம்புகிறார்கள்.

நாங்கள் 200 இடங்களில் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஓபிஎஸ் மீது மதிப்பு வைத்துள்ளோம். எந்த பக்கம் இருந்தால் அவருக்கு நல்லது என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும். திமுக அமைச்சர்கள் பலர் மீது நிறைய வழக்குகள் உள்ளது. அமைச்சர் கே.என்.நேரு விவகாரம் தொடர்பாக நீதிமன்றம் கூறிய கருத்துக்குள் நாங்கள் செல்லவில்லை.

தொகுதி பங்கீடு தொடர்பாக இதுவரை நாங்கள் பேச்சுவார்த்தை தொடங்கவில்லை. பேச்சுவார்த்தை தொடங்கி கூட்டணி கட்சிகளுடன் பேசி இறுதி முடிவை எடுப்போம். தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய அனைத்து நிதிகளையும் மத்திய அரசு வழங்குகிறது. அனைத்து நிதிகளையும் பெற்றுக்கொண்டு, நிதி கொடுக்கவில்லை என தமிழக அரசு கூறுகிறது.

ஆண்டுதோறும் ரூபாய் ஆயிரம் கோடி பேரிடருக்கான நிதியாக ஒதுக்கப்படுகிறது. கல்விக்கான நிதியும் ஒதுக்கப்பட்டு கொண்டுதான் உள்ளது. ஆதி திராவிடர் நலத் துறைக்கு கொடுக்கும் நிதியை வேறு துறைக்கு தமிழக அரசு பயன்படுத்துகிறது.” என்றார்.

பணப்பெட்டியை வாங்கிக் கொண்டு கூட்டணியில் சேர்கிறார்கள் என யாரை குறிப்பிடுகிறீர்கள் என்ற செய்தியாளர்கள் கேள்விக்கு, “நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்” என்று கூறிவிட்டு சென்றார்.

அதைத்தொடர்ந்து நயினார் நாகேந்திரன், திருச்சி பஞ்சப்பூர், பொன்மலை ஜி கார்னர், மன்னார்புரம் ராணுவ மைதானம், மாத்தூர் ரிங் ரோடு ஆகிய இடங்களை பார்வையிட்டார். இவற்றில் ஒரு இடத்தில் பிரதமர் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்டம் நடக்கவிருக்கிறது.

## சால்வை அணிவிப்பது போல் நடித்து திமுக நிர்வாகிக்கு கத்திக் குத்து திண்டுக்கல் அருகே பரபரப்பு

திண்டுக்கல், பிப்.22-

திண்டுக்கல் அருகே வேடசந்தூரில் சால்வை அணிவிப்பது போல் வந்து திமுக நிர்வாகியை கத்தியால் குத்திய நபரால் பரபரப்பு ஏற்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் திமுக (தெற்கு) ஒன்றியச் செயலாளராக இருப்பவர் வீரா.சாமிநாதன். இவர் கல்வி நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது வீடு வேடசந்தூர் கொங்கு நகரில் உள்ளது.

சனிக்கிழமை (பிப்.21) காலை வீட்டில் வைத்து நிர்வாகிகளை சந்தித்து கொண்டிருந்தார். அப்போது, சால்வை அணிவிப்பது போல் வந்து, மறைத்து வைத்திருந்த கத்தியால் மர்ம நபர், வீரா. சாமிநாதனின் கழுத்தில் குத்தினார். தடுக்க சென்ற நாச்சிமுத்து என்பவரையும் அந்த மர்ம நபர் கத்தியால் குத்தினார்.


அங்கிருந்த திமுகவினர் அந்த நபரை சுற்றி வளைத்து கூம்பூர் போலீஸில் ஒப்படைத்தனர். மேலும், காயமடைந்த வீரா.சாமிநாதன், நாச்சிமுத்து ஆகியோரை திண்டுக்கல்லில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

போலீஸார் விசாரணையில், கத்தியால் குத்திய நபர் எரியோடு பகுதியை சேர்ந்த மணிகண்டன் (40) என்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து, அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் வேடசந்தூர் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அமித் ஷா பற்றி அவதூறு பேச்சு: ராகுல் காந்தி வாக்குமூலம் பதிவு

புதுடெல்லி, பிப்.22-

கடந்த 2018 கர்நாடக சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, பாஜக தேசிய தலைவராக இருந்த அமித் ஷாவை ராகுல் காந்தி விமர்சனம் செய்தார்.



“பாஜக தூய்மையான அரசியலை நம்புவதாக கூறினாலும், கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அக்கட்சியின் தலைவராக உள்ளார்” என சாடினார்.

சொராபுதீன் ஷேக் போலி என்கவுன்ட்டர் வழக்கின் அடிப்படையில் ராகுல் இதை கூறியிருந்தார். ஆனால் 2014ம் ஆண்டிலேயே அவ்வழக்கில் இருந்து அமித் ஷா விடுவிக்கப்பட்டிருந்ததால் ராகுலுக்கு எதிராக உ.பி. சுல்தான்பூர் நீதிமன்றத்தில் உள்ளூர் பாஜக தலைவர் விஜய் மிஸ்ரா அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கில் ராகுல் 2024 பிப்ரவரியில் சரண் அடைந்து ஜாமீன் பெற்றார். 2024 ஜூலையில் ஆஜராகி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தார். இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணையை தொடர்ந்து, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313ன் கீழ் நேரில் விசாரணைக்கு ஆஜராக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் ராகுல் நேற்று சுல்தான்பூர் நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள் தொடர்பாக தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதன்பின் நீதிமன்ற வளாகத்தை விட்டு ராகுல் வெளியேறினார். இவ்வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 9ம் தேதி நடைபெற உள்ளது.

## கொங்கு மண்டலத்தின் பாதுகாப்பை உறுதி செய்க: இந்து முன்னணி

சென்னை, பிப்.22-

‘டெல்லி செங்கோட்டை குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையதாக 6 பேரை மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்துள்ள நிலையில், தமிழகத்தின் பாதுகாப்பை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்’ என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.



இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘டெல்லி செங்கோட்டையில் கடந்த ஆண்டு நவம்பர் 10ஆம் தேதி நடந்த வெடிகுண்டுச் சதியில் தொடர்புடைய 6 பேரை, திருப்பூர் பகுதியில் பதுங்கியிருந்தபோது, மத்திய புலனாய்வு துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

செங்கோட்டையில் நடந்த குண்டு வெடிப்பால் அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். அப்பாவிகளை கொல்ல சதி செய்த பயங்கரவாதிகள் தமிழகத்தில் பதுங்கி இருந்தார்கள் என்பது அச்சத்தை ஏற்படுத்துகிறது.

தமிழகத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் செயல்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பயங்கரவாதச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவான குரல் ஆளும் திமுக கூட்டணியால் எழுகிறது என்பதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதுவும் சட்டவிரோத வங்கதேச ஊடுருவல்காரர்கள் தமிழகத்தில் தான் அதிக அளவில் தலைமறைவாக வாழ்கிறார்கள். இதற்கு ஆளும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் உடந்தையாக இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் தொடர்ந்து வங்கதேசக்காரர்கள் கைது செய்யப்பட்டாலும் அரசியல் அழுத்தம் காரணமாக காவல்துறை தொடர் விசாரணை செய்யாமல் வழக்கை நீர்த்துப்போக செய்கின்றன.

மேலும் மத்திய புலனாய்வு துறையினர் மூலமே சதிகார பயங்கரவாதிகள் விசாரிக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர். தமிழகத்தில் புலனாய்வுத் துறை என்று ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

தொழில் நகரங்களில் பாதுகாப்பற்ற சூழல் உருவாவது மாநிலத்தின் நிம்மதியை, வளர்ச்சியை பெரிதும் பாதித்துவிடும் என்பதை மாநில அரசு புரிந்து கொண்டு கொங்கு மண்டலத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

வாக்கு வங்கி அரசியலுக்காக தமிழகத்தின் பாதுகாப்பில் எந்த சமரசத்துக்கும் மாநில அரசு இடம் தரக் கூடாது. மாநில அரசு, பயங்கரவாதிகள் மீது தொடர் நடவடிக்கை எடுத்து மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று இந்து முன்னணி சார்பில் கேட்டுக் கொள்கிறோம்’’ என தெரிவித்துள்ளார்.



# ஏஐ மாநாட்டு பிரமுகர்களுக்கு பிரதமர் சிறப்பு விருந்து

புதுடெல்லி, பிப்.22-

டெல்லியில் நடைபெறும் ஏஐ உச்சி மாநாட்டில் பங்கேற்ற உலகத் தலைவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த அக்கறையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வாமை இல்லாத மதிய உணவை நேற்று முன்தினம் வழங்கினார்.

ஏஐ உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இந்த மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. மாநாட்டில் பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டின் 4ம் நாளான நேற்று முன்தினம் ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியா குத்தேரஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் மற்றும் கூகுள் நிறுவனத்தின் சுந்தர் கே.பிச்சை, ஓபன்ஏஐ நிறுவனத்தின் சாம் ஆல்ட்மேன் உள்ளிட்ட சிஇஓக்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு பாரத் மண்டபத்தில் மதியம் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்து அளித்தார்.

ஒவ்வாமை ஏற்படாத வகையில் பால், கோதுமை அல்லது உலர் கொட்டைகள் இல்லாமல் இவை தயாரிக்கப்பட்டிருந்தன. சர்வதேச பிரதிநிதிகளுக்காக மிகுந்த கவனமுடன் மெனு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் நம் நாட்டின் வளமான சமையல் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாக இது இருந்தது. தினை, பருப்பு, தாமரை தண்டு, பாஸ்மதி அரிசி, குங்குமப்பூ போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டு முற்றிலும் சைவ உணவு பரிமாறப்பட்டது.

ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்ட அதே வேளையில் இந்தியாவின் பிராந்திய சுவைகளை விருந்தினர் அனுபவிக்கும் வகையில் இவை தயாரிக்கப்பட்டிருந்தன.

உ.பி. மற்றும் பிஹாரில் பிரபலமான நிமோனா கேபப், காஷ்மீரின் நட்ரு குர்குரி, ஹைதராபாத்தின் ஜாஃப்ரானி சப்ஸ் புலாவ் உள்ளிட்ட உணவுகள் மற்றும் பல வகை சாலட்கள் மற்றும் இனிப்புகள் பரிமாறப்பட்டன.



# மே.வங்க எஸ்ஐஆர் பணியில் நீதிபதிகள் நியமனம்: உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.22-

மேற்குவங்க எஸ்ஐஆர் பணிகள் தொடர்பான முரண்பாடுகள், ஆட்சேப மனுக்களை பரிசீலிக்க நீதிபதிகளை நியமிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடைபெறுகிறது. இதை எதிர்த்து அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த சூழலில் எஸ்ஐஆர் பணி தொடர்பான முரண்பாடுகள் மற்றும் ஆட்சேப மனுக்களை பரிசீலிக்க மாவட்ட நீதிபதிகள், மாவட்ட முன்னாள் நீதிபதிகளை பணியில் அமர்த்த கொல்கத்தா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

''எஸ்ஐஆர் விவகாரத்தில் மேற்குவங்க அரசுக்கும் தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கும் இடையே நம்பிக்கை அற்ற சூழல் நிலவுவதை கருத்தில் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபடும் மாவட்ட நீதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க உத்தரவிடுகிறோம். எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியது தொடர்பாக கூடுதல் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய டிஜிபிக்கு உத்தரவிடுகிறோம்'' என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# லாலுவை திருதராஷ்டிரருடன் ஒப்பிட்டு கிண்டலடித்த பாஜக எம்எல்ஏ மைதிலி தாக்கூர்





பாட்னா, பிப்.22-

பிஹார் மாநிலத்தின் பாஜக எம்எல்ஏ மைதிலி தாக்கூர்(25). நாட்டின் மிக இளம் வயது எம்எல்ஏ இவர்தான். இவர் பிஹார் சட்டப்பேரவையில் நேற்று பேசியதாவது:

2005ம் ஆண்டுக்கு முன்பு இருந்த காலத்தை நான் நினைத்து பார்க்கும்போதெல்லாம், மகாபாரதத்தில் அஸ்தினாபுரத்தை மன்னர் திருதராஷ்டிரர் ஆண்டதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. மன்னருக்கு பார்வையில்லை. அதனால் அவர் எதையும் பார்க்க விரும்பவில்லை. அவருக்கு ஹஸ்தினாபுரத்தை பற்றி கவலையில்லை. அவருக்கு மகன் துரியோதனன் மட்டுமே முக்கியம்.

பிஹார் மாநிலம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதனால் பல தலைமுறையினர் இன்னும் கஷ்டப்படுகின்றனர். அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் கண்களையும், காதுகளையும் கட்டிக் கொண்டனர். பிஹாரில் மாலை 6 மணிக்கு மேல் வெளியே சென்றால் ஆபத்து என மக்கள் கூறுவார்கள்.

ஆனால் இன்று அதிகாலை 3 மணிக்கு தர்பங்காவிலிருந்து புறப்பட்டு பாட்னாவில் எனது வீட்டுக்கு நான் பாதுகாப்பாக செல்கிறேன். இந்த மாற்றம் முதல்வர் நிதிஷ் குமாரின் சிறந்த நிர்வாகத்தால் ஏற்பட்டுள்ளது. முதல்வர் நிதிஷ் குமார் கடந்த 2006ம் ஆண்டு 9ம் வகுப்பு மாணவிகளுக்கு சைக்கிள் வாங்க நிதி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

அதன்பின்புதான் எனது மதுபானி கிராமத்தில் பெண் குழந்தைகள் பள்ளிக்கு செல்ல தொடங்கினர். பிஹாரின் புதல்வி உண்மையை எடுத்துக் கூறினால், எதிர்க்கட்சியினர் கூச்சலிடுகிறார்கள். இவ்வாறு மைதிலி தாக்கூர் பேசினார்.

# கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் தொழுவம் முல்லை விழா சார்பில் ஜல்லிக்கட்டு போட்டி

அலங்காநல்லூர், பிப்.22-

மதுரை மாவட்டம்அலங்காநல்லூர், அருகே கீழக்கரை, கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் ஐக்கிய நாடுகள் சபை, தொழுவம் முல்லை விழா சார்பில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. காலை 8.30 மணிக்கு தொடங்கிய இந்த ஜல்லிக்கட்டு போட்டியை மாநில மருத்துவர் அணி செயலாளர் திலீப் ராஜகண்ணப்பன், சோலைமலை குழுமம் பிச்சை, ஆகியோர் பச்சைக்கொடியசைத்து தொடங்கி வைத்தனர். போட்டி தொடங்குவதற்கு முன்பாக பாரம்பரிய முறைப்படி வளாகத்தில் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது.



முன்னதாக வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகர், இயற்கை விவசாயிகள் சங்க நிறுவனர் நல்லமணி காந்தி, மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு உறுதிமொழியை வாசிக்க மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். தொழுவம் முல்லை விழா முனைவர் கபிலன் ஏற்பாடுகளை செய்திருந்தார். முன்னதாக ஜல்லிக்கட்டு வளாகத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. வருவாய் துறையினர், மருத்துவ துறையினர், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 400 காளைகள், அதனை அடக்க 200 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். களத்தில் நின்று விளையாடும் காளையின் உரிமையாளருக்கும், காளைகளை அடக்கும் வீரர்களுக்கும் சைக்கிள், அண்டா, உள்ளிட்ட பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் தலைமையில் 136 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# ஏஐ வளர்ச்சி மற்றும் முக்கிய தாதுக்களை பெற பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் சேர இந்தியா ஒப்பந்தம்

புதுடெல்லி, பிப்.22-

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்காகவும் முக்கிய தாதுக்களை பகிர்ந்து கொள்ளவும் உருவாக்கப்பட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இணைய இந்தியா ஒப்பந்தம் செய்தது.




பாக்ஸ் சிலிக்கா என்பது செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி மற்றும் செமிகண்டக்டர்களுக்கான உலகளாவிய விநியோகத்தை பாதுகாப்பதற்காக அமெரிக்காவால் தொடங்கப்பட்ட கூட்டணியாகும். இதில் ஆஸ்திரேலியா, கிரீஸ், இஸ்ரேல், ஜப்பான், கத்தார், தென் கொரியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இங்கிலாந்து ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. டெல்லியில் நடைபெறும் ஏஐ உச்சி மாநாட்டில் அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் இந்தியா நேற்று ஒப்பந்தம் செய்தது.

இதன் மூலம் அரிய வகை தாதுக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு விநியோகத்துக்கு சீனாவை சார்ந்திருப்பது குறையும். அடுத்த தலைமுறை தொழில்துறைகளுக்குத் தேவையான முக்கிய ஆதாரங்களைப் பாதுகாப்பான முறையில் பெறுவது, தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ள நிலையில், அமெரிக்கா தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா அமைப்புடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

இந்தியா இப்போது பாக்ஸ் சிலிக்காவின் ஓர் அங்கமாக மாறியுள்ளது. இது இந்தியாவின் மின்னணு மற்றும் செமிகண்டக்டர் தொழில்துறைக்கு மிகவும் பயனளிக்கும். இந்தியாவில் ஏற்கனவே பத்து செமிகண்டக்டர் ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில், முதல் செமிகண்டக்டர் ஆலை வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கவுள்ளது. இந்தியாவில் ஒரு முழுமையான தொழில் சூழல் உருவாகி வருகிறது. இதற்கு பாக்ஸ் சிலிக்கா முக்கியமானதாக இருக்கும். இதன் மூலம் இந்திய இளைஞர்கள் பயனடைவர். இவ்வாறு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் கூறுகையில், “21ஆம் நூற்றாண்டின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒழுங்கை வடிவமைப்பதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்துள்ளன. இந்தியாவின் பொறியியல் திறன், தாதுக்களை மேம்படுத்துவதில் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் அமெரிக்கஇந்திய தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் அதன் பங்கு ஆகியவை மிக அவசியமானது. உலகளவில் நம்பகமான செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவதே இந்த கூட்டாண்மையின் நோக்கம்” என்றார்.

# ஏஐ வரவால் 40% வேலைவாய்ப்புகள் பாதிக்கும்: சர்வேதச நிதியத்தின் தலைவர் கருத்து

புதுடெல்லி, பிப்.22-



சர்வேதச நிதியத்தின் (ஐஎம்எஃப்) தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது:

ஏஐ மற்றும் அது தொடர்பான தொழில்நுட்பங்களால் உலகளவில் 40 சதவீத வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும். ஆரம்பநிலை பணியிடங்கள் ஏஐ வரவால் பாதிப்புக்கு ஆளாக நேரிடும்.

இது முதல் வேலையைத் தேடும் இளம் பட்டதாரிகளுக்குப் சவாலாக அமையும். மேம்பட்ட பொருளாதார நாடுகளில் இந்த பாதிப்பு 60 சதவீதம் வரை இருக்கலாம். ஆனால், இந்தியாவில் இது 26 சதவீதமாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



# திருமலையில் கோடைக்கால தரிசன ஏற்பாடுகள்

திருமலை, பிப்.22-

திருமலையில் கோடைக்கால தரிசன ஏற்பாடுகள் குறித்து தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி கூறியதாவது:

கோடைக்கால தரிசன ஏற்பாடுகளை சிறப் பாக செய்திட வேண்டும். இதில் சாமானிய பக்தர் களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கடந்த கோடையில் தினமும் 82,000 பக்தர்கள் வரை சுவாமி தரிசனம் செய்தனர்.

கடந்த ஜனவரியில் தினமும் சராசரியாக 74 ஆயிரம் பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர். இதை கருத்தில் கொண்டு சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தரிசன ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# திமுக தேமுதிக கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி” : ராஜேந்திர பாலாஜி விமர்சனம்

சிவகாசி, பிப்.22-

"திமுக தேமுதிக கொள்கை ரீதியிலான கூட்டணி அல்ல, கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி" என அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.




சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் திமுக ஆட்சிக்கு எதிராக வீடு வீடாகச் சென்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்த பின்னர், தேமுதிகவின் கொள்கை மற்றும் கடந்த காலங்களில் திமுக குறித்து விஜயகாந்த், பிரேமலதா, விஜய பிரபாகரன் பேசிய பேச்சுகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. அந்த பேச்சுகளை பார்த்தால் இந்த கூட்டணி சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற நோக்கில் லட்சிய கூட்டணியை அதிமுக அமைத்து உள்ளது. திமுக ஆட்சியில் அத்தியாவசிய குடும்ப செலவு இரண்டு மடங்கு உயர்ந்து உள்ளது. கோடைக்கு பணம் கொடுத்துள்ளேன் என கூறுவது மக்களை ஏமாற்றும் நாடகம். பொய்யைச் சொல்லி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக அவர்கள் செய்த வேலைதான், தேமுதிகவை வளைத்த வரலாறு.

திமுக தேமுதிக கொள்கை ரீதியிலான கூட்டணி அல்ல, கொள்ளை அடிப்பதற்கான கூட்டணி. திமுக தேமுதிகவை எப்படி வளைத்தது என்ற வரலாறு சமூக வலைதளங்களில் அழகாக வந்து கொண்டிருக்கிறது. கேப்டன் எதற்காக கட்சியை ஆரம்பித்தார், அதற்கு மாறாக கூட்டணி சேர்ந்து விட்டு பிரேமலதா சொல்லும் காரணத்தை ஏற்காத தொண்டர்கள் அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.

திமுக ஆட்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் பாதிக்கப்பட்டு உள்ளார். மீண்டும் திமுக ஆட்சிக்கு வரும் என முதல்வர் கூறுவது பகல் கனவு. அதிமுக கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. அரசு ஊழியர்கள் முதல் பட்டாசு தொழிலாளர்கள் வரை பாதிக்கப்பட்டு உள்ளனர். திமுக ஆட்சியின் நிர்வாக சீர்கேட்டால் தான் தமிழக அரசின் நிதி நிலைமை மோசமானது. 75 ஆண்டுகாலமாக தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.4.5 லட்சம் கோடி கடன் வாங்கிய நிலையில், ஸ்டாலின் அரசு 5 ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளது.

திட்டமிட்டு பொய்யை சொல்லி கடன் வாங்கி, அதில் லாபம் சம்பாதிக்கும் வேலையை இந்த அரசு செய்துள்ளது. இது படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை தெரிந்துள்ளதால் அவர்கள் திமுகவிற்கு வாக்களிக்க மாட்டார்கள். மக்கள் நலனில், தேசிய நலனில் அக்கறை கொண்ட அதிமுக பாஜக கூட்டணிக்கு தான் மக்கள் வாக்களிப்பார்கள்.

திமுகவை எதிர்த்து தான் எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கி அரசியல் செய்தார். அதே திமுக எதிர்ப்பில் தான் ஜெயலலிதா தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெற்று முதல்வரானார். அதிமுகவின் கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பவர்களை (ஓ.பன்னீர்செல்வம்) சுயநலவாதிகள் என்றுதான் தமிழகம் சொல்லும்.

தவெக பரிதாபமான நிலையில் உள்ளது. அவர்களை யாருமே கண்டு கொள்வது கிடையாது. ஒரு நாள் கூத்துக்கு தவெக தாங்காது. அதிமுக, திமுக கூட்டணி மட்டுமே களத்தில் நிற்கும். தனித்து நின்று 27 ஆயிரம் ஓட்டு வாங்கியவர்களுக்கெல்லாம் (மாணிக்கம் தாகூர்) அதிமுக பதில் கூற முடியாது. காங்கிரஸ் கட்சி எதுவும் இல்லாமல் வேடிக்கை காட்டுகிறது. அவர்கள் பேச்சை வேடிக்கையாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமலாக்கத்துறை பலமுறை கடிதம் அனுப்பியும் அமைச்சர் கே.என்.நேரு மீது வழக்கு பதிவு செய்யாத திமுக அரசுக்கு உயர் நீதிமன்றம் குட்டு வைத்துள்ளது. தேடித்தேடி பொய் வழக்கு போடும் தமிழக காவல்துறை, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டம் அமைச்சர் நேரு மீது வழக்கு பதிவு செய்யாமல் உள்ளது. திமுகவினரும், அமைச்சர்களும் செய்யும் தவறுகளை தட்டிக் கேட்காமல், தட்டிக் கொடுக்கும் வேலையை தலைமை செய்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.




■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் சீனிவாசபுரத்தில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நடைபெற்ற தெருமுனை பிரச்சார கூட்டத்தில், கட்சியின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் கூட்டணி கட்சியான அதிமுக, அமமுக, ஐஜேகே, தமிழ் தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சி, பாமக போன்ற அனைத்து கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் திமுக அரசின் மக்கள் விரோத போக்கை எதிர்த்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. பாரதிய ஜனதா கட்சியின் கொடைக்கானல் நகர பொதுச்செயலாளர் மணிவாசவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு, பிஜேபியின் நகர தலைவர் சரவணன் முன்னிலை வகித்தார்.



■ ராதாபுரம் வடக்கு ஒன்றியம் திசையன்விளையில் பழைய பேருந்து நிலையம் பிஜேபி கட்சியின் சார்பாக "நாளை நமதே நாடும் நமதே" என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தமிழ்ச்செல்வன், மாவட்ட துணைத் தலைவர் ஜெகநாதன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் மகாராஜன், ஓ பி சி அணி பொறுப்பாளர் கணேசன், மாநில செயற்குழு உறுப்பினர் சாந்தி ராகவன் ஒன்றிய தலைவர் தினகரன் துணைத் தலைவர் முத்தமிழ்செல்வி, சரவணகுமார் பொதுச்செயலாளர் ரங்கநாதன் பிரபு ஒன்றிய செயலாளர் எஸ் கணேசன் மூர்த்தி மாவட்ட செயலாளர் கலைச்செல்வன், சுற்றுச்சூழல் மாவட்ட தலைவர் ஆறு செந்தில், பொருளாதார அணி மாவட்ட செயலாளர் சந்தனகுமார், முத்துகிருஷ்ணன் தொழில் பிரிவு, மற்றும் ராமசுந்தர பாண்டியன் தர்மராஜ் கணேசமுத்து ராமலிங்கம் ஒன்றிய பொறுப்பாளர்கள் கேந்திர பொறுப்பாளர்கள் மணிகண்டன் ஊடகப்பிரிவு ஆகியோர் கலந்து கொண்டனர்.




## சிவகிரியில் திமுக சார்பில் ஐந்து ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

சிவகிரி, பிப்.22-

சிவகிரியில் திமுக சார்பில் ஐந்து ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. நட்சத்திர பேச்சாளர்சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பேசினார். காந்திஜி கலையரங்கம் முன்பு நடந்த கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் சவுக்கை

யுஎஸ்டி சீனிவாசன் தலைமை தாங்கினார். வாசு யூனியன் சேர்மன் வடக்கு ஒன்றிய செயலாளர் பொன் முத்தையா பாண்டியன், முன்னிலை வகித்தனர். சிவகிரி பேரூர் பொறுப்பாளர்கள் நல்லசிவன், கந்தவேல், சேது சுப்ரமணியன், ஆகியோர் வரவேற்றனர். தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

திமுக மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், மாவட்டத் திமுக துணைச் செயலாளர் மனோகரன், ராயகிரி பேரூர் செயலாளர் கேடிசி குருசாமி, சிவகிரி பேரூராட்சி தலைவி கோமதி சங்கரி சுந்தரவடிவேலு, மாவட்ட மருத்துவரணி செயலாளர் டாக்டர் மணிகண்டன், தலைவர் டாக்டர் சுமதி, வழக்கறிஞர் பொன்ராஜ், டாக்டர்ஜோதி, மகளிர் அணி செல்வகுமாரி, திமுக மாவட்ட துணை அமைப்பின் துணை அமைப்பாளர்கள் ஆயில் ராஜபாண்டியன், வீரமணி, மாரியப்பன், விக்னேஷ், ராஜா, முத்துலட்சுமி, கிருஷ்ணலீலா, பூமிநாதன், புல்லட் கணேசன், குமார், பேரூர் நிர்வாகிகள் துரைராஜ், பரமசிவம், முனியாண்டி, முத்தையா, ராம்குமார், மணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ரத்தினராஜ், விக்னேஷ், ராஜலட்சுமி இருளப்பன், இளையராஜா, ரூபன் குமார், சாமுவேல், ராமச்சந்திரன் உட்பட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

## டெல்லி ஏஐ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்க புர்ஜ் கலீபாவில் ஜொலித்த மூவர்ண கொடி

துபாய், பிப்.22-

டெல்லி ஏஐ உச்சி மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. இந்த மாநாட்டில் பல நாடுகளும், பல தலைமை செயல் அதிகாரிகளும் (CÞæ) பங்கேற்றுள்ளனர். மாநாட்டில் நேற்றுமுன்தினம் 19ம் தேதி பிரதமர் மோடி உரையாற்றினார்.




இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலும், ஏஐ மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் உலகின் மிகப்பெரிய கட்டிடமான புர்ஜ் கலீபாவில் இந்திய தேசியக் கொடியின் மூவர்ணம் மின்விளக்குகளில் காட்சிப்படுத்தப்பட்டது.

இதற்கு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் பாராட்டு தெரிவித்துள்ளது. "இந்தியா யுஏஇ இடையே உள்ள உறவை காட்டும் சக்திவாய்ந்த சின்னம் இது" என்று இந்திய தூதரகம் பெருமிதம் தெரிவித்துள்ளது.

புர்ஜ் கலீபா கட்டிடத்தில் மூவர்ண கொடி ஜொலிக்கும் படத்தை வெளியிட்டு 'இந்திய ஏஐ மாநாட்டை உலகின் மிக உயர்ந்த கட்டிடம் கொண்டாடுகிறது' என்ற படவிளக்கத்துடன் இந்திய தூதரகம் வெளியிட்டுள்ளது. இந்தப் படத்தைப் பார்த்து பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## தேவாலயம் கட்ட எதிர்ப்பு அரசு ஆவணங்களை ஒப்படைத்து சுடுகாட்டில் குடியேறுவதாக கிராம மக்கள் மனு

திருநெல்வேலி, பிப்.22-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை தாலுகாவிற்கு உட்பட்ட தெற்கு ஏரந்தை கிராமத்தில் உரிய அரசு அனுமதி இன்றி புதிய தேவாலயம் கட்டப்பட்டு வருவதாகவும் பாரம்பரியமாக இந்துக்கள் வசிக்கும் இப்பகுதியில், தேவாலயம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களைச் சில நபர்கள் மிரட்டுவதாகவும், இது மதக் கலவரத்தைத் தூண்டும் வகையில் இருப்பதாகவும் இந்தப் பிரச்சனைக்கு அரசு உரிய தீர்வு காணாவிட்டால், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அப்பகுதி மக்கள் அறிவித்துள்ளனர்.



மேலும் போராட்டத்தின் உச்சகட்டமாக, தங்கள் குடும்ப அட்டை, ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை அரசிடமே திரும்ப ஒப்படைத்துவிட்டு, ஊர் மக்கள் அனைவரும் சுடுகாட்டில் குடியேறப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

தங்கள் கிராமத்தின் அமைதியைப் பாதுகாக்கவும், சட்ட ஒழுங்குப் பிரச்சனைகளைத் தவிர்க்கவும், சட்டவிரோதமாகக் கட்டப்பட்டு வரும் தேவாலயக் கட்டுமானப் பணிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தெற்கு ஏரந்தை ஊர் பொதுமக்கள் சார்பில் ஆர். தனசிங் என்பவர் தலைமையில் சுமார் 50க்கும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்தனர்.

இது குறித்து திசையன்விளை வட்டாட்சியர் நாராயணன் ஏறந்தி கிராமத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் பட்டா இடத்தில் பஞ்சாயத்து அப்ரூவல் பெற்று சர்ச் கட்டுவதாகவும் , நீதிமன்றம் அதற்கு காவல்துறையும், வருவாய்த்துறையும் உரிய பாதுகாப்பு தர உத்தரவிட்டிருப்பதாகவும் கூறியதுடன், மக்கள் கூறியது போல் கமர்ஷியல் கட்டிடம் கட்ட அப்ரூவல் பெற்று சர்ச் கட்டினால் கண்டிப்பாக சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.




## முகத்தில் தேனீக்களுடன் 5 மணிநேரம் வள்ளியூரில் புதிய உலக சாதனை படைத்த இசக்கிமுத்து

வள்ளியூர், பிப்.22-

வள்ளியூரில் சோழன் உலக சாதனை புத்தம் சார்பில் நடைபெற்ற உலக சாதனை நிகழ்ச்சியில், மலையடிப்புதூரைச் சேர்ந்த இளைஞர் தனது முகத்தில் தேனீக்களை 5 மணிநேரம் 3 நிமிடம் தங்கவைத்து உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றார். வள்ளியூர் மரியா கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரியில் சோழன் உலக சாதனை புத்தம் சார்பில் உலகசாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் களக்காடு அருகே உள்ள மலையடிப்புதூரைச் சேர்ந்த சேர்மதுரை மகன் இசக்கிமுத்து(27) பங்கேற்றார். அவர் தனது முகத்தில் தேனீக்களை 5 மணிநேரம் 3 நிமிடம் தங்கவைத்து இதற்கு முன்னர் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் 4 மணிநேரம் 14 நிமிடம் தேனீக்களை தனது முகத்தில் தங்கவைத்து படைத்த உலக சாதனையை முறியடித்து புதிதாக உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார். இதனை அடுத்து சோழன் உலக சாதனை புத்தக நிறுவனர் முனைவர் நீலமேகம் நிமலன் உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்து சான்றிதழ் வழங்கினார்.

இதனை அடுத்து இசக்கிமுத்து கூறியது டிப்ளமோ விவசாயம் பட்டயப்படிப்பை முடித்த நான் கடந்த 6 ஆண்டுகளாக மலையடிப்புதூரில் எனது பண்ணை தோட்டத்தில் தேனீக்களை வளர்த்து தேன் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறேன். இதன் மூலம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு தேனீ வளர்ப்பதற்கு இலவசமாக பயிற்சி அளித்து வருகிறேன். உலக சாதனை படைக்கவேண்டும் என எனது எண்ணத்தில் உருவானது. இதனை அடுத்து தேனீ வளர்ப்பவர்கள் குறித்து விசாரித்து வந்தேன். அப்பொழுது தான் கேரளாவைச் சேர்ந்த ஒருவர் 4 மணிநேரம் 14 நிமிடம் தனது முகத்தில் தேனீக்களை தங்கவைத்து சாதனை படைத்துள்ளது குறித்து கேள்விப்பட்டேன். இதனை அடுத்து நானும் முயற்சி செய்து வந்தேன். இன்றைக்கு கேரளா நபரின் சாதனையை முறியடித்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளேன் என்றார். வள்ளியூர் வணிகர் நல சங்க செயலாளர் கவின் வேந்தன் தொகுத்து வழங்கினார். சோழன் உலக சாதனை புத்தக திருநெல்வேலி மாவட்ட தலைவர் அலெக்ஸ்செல்வன் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.




## பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு சிலை அமைக்க திருப்பூர் மேயரிடம் கோரிக்கை மனு

திருப்பூர், பிப். 22-

திருப்பூர் மாநகராட்சி மேயர் நா. தினேஷ் குமார் அவர்கள் தலைமையில் இன்று அனைத்து சமுதாயத் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மற்றும் கோரிக்கை மனு ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட முத்தரையர் சமுதாயம் சார்பாக, முத்தரையர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை நிறுவனரும், முத்தரையர் எழுச்சிச் சங்க ஒருங்கிணைப்பாளருமான டாக்டர் தர்மராஜ் கலந்துகொண்டு கோரிக்கை மனுவை வழங்கினார்.

*முக்கியக் கோரிக்கைகள்:*

புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் முற்காலத்தில் முத்தரையர்கள் வாழ்ந்த வரலாற்றுப் பின்னணி உள்ளது. எனவே, அப்பகுதியில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் திருவுருவச் சிலையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*அரசியல் பிரதிநிதித்துவம்:* வரும் தேர்தல்களில் முத்தரையர் சமுதாய மக்கள் அதிக அளவில் வசிக்கும் தொகுதிகளில், அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கே போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும்.

*சான்றிதழ் கோரிக்கை:* தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வசிக்கும் முத்தரையர் சமுதாயத்தின் 29 உட்பிரிவுகளையும் ஒன்றிணைத்து, அவர்களுக்கு DNC/DNT என்ற ஒற்றைச் சான்றிதழ் வழங்க வேண்டும்.

இந்த நிகழ்வின் போது சமுதாய நிர்வாகிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் உடனிருந்தனர்.

## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாசி திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

தூத்துக்குடி, பிப்.22-

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மாசி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.



அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழா இன்று அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி கோயில் அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து கொடிப்பட்டமானது .வெள்ளிப்பல்லக்கில் 9 சந்திகள் வலம் வந்து கோயிலில் அதிகாலை 5.05 மணிக்கு செப்புக்கொடிமரத்தில் காப்புகட்டிய கற்பக வீரக்குமார் பட்டர் கொடியினை ஏற்றினார். தொடர்ந்து கொடிமரத்துக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரமாகி காலை 6.35 மணிக்கு மகா தீபாராதனை நடந்தது.

நிகழ்ச்சியில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மத் தம்பிரான் சுவாமிகள், திருக்கோயில் இணை ஆணையர் ராமு, உதவி ஆணையர் மெய்வேல், கண்காணிப்பாளர் விவேக், ஏரல் சேர்மன் கோயில் பரம்பரை அக்தார் கருத்தப்பாண்டியன், இந்து முன்னணி மாநில துணைத்தலைவர் ஜெயக்குமார் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000